# தமிழ் ஈழம் ஆதரவாளர் அமைப்பின் (டெசோ) கலந்துரையாடல் கூட்டம்

## (4–2–2013)

## தீர்மானங்கள்

**தீர்மானம் 1:**

இலங்கையில் தமிழ் மொழி, தமிழ் கலாச்சாரத்தை நீர்த்துப் போகச் செய்வதிலும், கட்டமைப்பு ரீதியாக அங்கு தமிழருடைய அடையாளங்களை அழிப்பதிலும் – தமிழர்களின் வாழ்வாதாரங்களை சீர்குலைப்பதிலும் சிங்கள அரசு திட்டமிட்டு வேகமாக செயல்படுகிறது. தமிழர்கள் வாழும் 89 கிராமங்களின் பெயர்கள் சிங்களப் பெயர்களாக மாற்றப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாது தமிழர்கள் வழிபடும் 367 இந்துக் கோயில்கள், மசூதிகள், தேவாலயங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பிரச்சினை தலைவர் கலைஞர் அவர்களின் கவனத்திற்கு வந்தவுடன், தலைவர் கலைஞர் அவர்கள் இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கும், திருமதி. சோனியா காந்தி அவர்களுக்கும் கடிதம் எழுதி இப்பிரச்சினையில் தலையிட்டு உடனடியாக தடுத்து நிறுத்திட வேண்டும்

என்று கேட்டுக் கொண்டதை உலகத் தமிழ் சமுதாயம் நன்றி கூறி பாராட்டியது.

தமிழர்களுடைய அடையாளம் அழிக்கப்பட வேண்டும் என்றும்; சிங்கள இன அரசு நிலைநிறுத்தப்பட வேண்டும் என்றும்; திட்டமிட்டுச் செயல்படும் சிங்கள அரசை கண்டிப்பதோடு; இவ்வாறான சர்வாதிகார நடவடிக்கைகளை தடுத்து நிறுத்திட இந்திய அரசும், உலக நாடுகளும் தலையிட வேண்டும் என இக்கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் 2:

கடந்த ஆண்டு ஐ.நா. மனித உரிமை ஆணையக் கூட்டத்தில் அமெரிக்க அரசு இலங்கை அரசுக்கெதிராக கொண்டு வந்த தீர்மானத்தைத் தமிழகத்தின் வற்புறுத்தலால் இந்தியாவும் ஆதரித்து அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானத்தின்படி ராஜபக்சே அரசு எவ்வித மேல் நடவடிக்கையும் எடுக்காமல், அத்தீர்மானத்திற்கு எதிராகத் தவறான பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் அமெரிக்க அரசு, ஐ.நா. மனித உரிமை ஆணைய கவுன்சிலில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் இலங்கை அரசை நிர்பந்திக்கும் வகையில் புதிய தீர்மானத்தைத் தாக்கல் செய்ய உள்ளதாக அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜேம்ஸ் மூர் தெரிவித்துள்ளார்.

ஈழத் தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசைக் கண்டிக்கும் அத்தகைய தீர்மானம் கொண்டு வரப்பட வேண்டுமென்றும், அந்தத் தீர்மானத்தை ஆதரிப்பது மட்டுமல்லாமல், எவ்வித ஐயத்திற்கும் இடம் தராத – உறுதியான நிலைப்பாட்டை எடுத்து; ஈழத் தமிழருக்கு விரைவில் வாழ்வுரிமை கிடைக்கும் வகையில், இந்திய அரசு நடவடிக்கைளை மேற்கொள்ள வேண்டும் என்று இக்கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் 3:**

கடந்த 2009இல் இலங்கையில் போர் முடிந்தவுடன் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டனர். இளங்குமரன் என்ற பேபி சுப்பிரமணியன், பாலகுமார், யோகி, கவிஞர் புதுவை இரத்தினதுரை, இளம்பரிதி, எழிலன், பூவண்ணன் போன்ற முன்னணி தலைவர்களை இலங்கை அரசு கைது செய்து யாரும் அறியாத இடத்தில் சிறையில் அடைத்தது. இதுகுறித்து யோகியின் மனைவி யோகரத்தினம் யோகி, அப்போது கேள்வி எழுப்பியிருந்தார். இவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா என்ற கேள்வி தற்போது ஈழத்தில் எழுந்துள்ளது. இவர்களில் பலர் சாகடிக்கப்பட்டுள்ளனர் என்றும் செய்திகள் வந்துள்ளன. கேள்விக்குறியாக உள்ள இந்தச் செய்திகளுக்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு ராஜபக்சே அரசுக்கு உள்ளது. இதுகுறித்த உண்மை நிலைமைகளை சிங்கள அரசு உலகுக்கு வெளியிட, இந்திய அரசும்,

**உலக சமுதாயமும் அழுத்தம் தர வேண்டுமென இக்கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.**

**தீர்மானம் 4:**

யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் ஜனநாயக அடிப்படையில் அமைதியான முறையில் கார்த்திகை தீபம் ஏற்றி மாவீரர் திருநாளன்று கூடியதற்காக கடந்த நவம்பர் 27ஆம் தேதி 12 மாணவர்களை சிங்கள அரசு கைது செய்தது. பல்வேறு போராட்டத்தின் விளைவாக அவர்களில் 10 மாணவர்கள் விடுவிக்கப்பட்டனர். யாழ்ப் பல்கலைக் கழக ஒன்றிய செயலாளர் ப.தர்சானந், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் க.ஜெனமேஜெயந்த், ஆகிய இருவர் வெலிகந்த கட்டைக்காடு சிறை முகாமில் அடைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து யாழ் பல்கலைக் கழக மாணவர்களும், பேராசிரியர்களும் இந்த மாணவர்களின் விடுதலைக்காக போராடி வருகின்றனர். மனித உரிமைகளை மதிக்காமல் இம்மாணவர்களை சிறைப் பிடித்து வைத்துள்ள சிங்கள அரசை வன்மையாகக் கண்டிப்பதோடு, உடனடியாக அந்த இரண்டு மாணவர்களை விடுதலை செய்ய இந்திய அரசு தலையிட்டு ஆவன செய்ய வேண்டுமென இக்கூட்டம் வேண்டி கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் 5:**

கடந்த 12–8–2012 அன்று சென்னையில் நடைபெற்ற “டெசோ” மாநாட்டில், “ஐ.நா. அவையின் மனித உரிமைக் குழுவின் சார்பில் சர்வ தேசக் குழு ஒன்று அமைக்கப்பட்டு இலங்கையில் நடைபெற்ற

போர்க்குற்றங்கள் கண்டறியப்பட்டு போர்க் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்'' என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்திற்கு உலகத் தமிழர்கள் ஒட்டுமொத்த ஆதரவினைத் தெரிவித்துள்ளனர். எனவே இந்தத் தீர்மானத்தை மீண்டும் வலியுறுத்துவதென இக்கூட்டம் முடிவு செய்கிறது.

தீர்மானம் 6:

தமிழக மீனவர்களை இலங்கை இராணுவம் தொடர்ந்து துன்புறுத்தி கைது செய்து வருகிறது. இந்த தொடர் சம்பவங்கள் குறித்து 12.8.2012 அன்று தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற டெசோ மாநாட்டில் ஒரு அழுத்தமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இந்நிகழ்வை தடுக்கக்கூடிய வகையில் இராமேஸ்வரம் அருகே மண்டபத்தில் ஒரு கடற்படை தளத்தை அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டது.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்தும், உடனடியாக மண்டபத்தில் இந்திய கடற்படை தளத்தை அமைத்திட வேண்டுமெனவும் மத்திய அரசை இக்கூட்டம் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தொடர்ந்து இவ்வாறு துன்புறுத்தி வருவதைக் கண்டித்து, ராமேஸ்வரத்தில் 18–2–2013 அன்றும், நாகப்பட்டினத்தில் 19–2–2013 அன்றும் "டெசோ"

அமைப்பின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவதென இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

தீர்மானம் 7.

ஈழத் தமிழ் மக்களுக்கு அனைத்து அடிப்படை வாழ்வுரிமைகளும், ஜனநாயக உரிமைகளும் வழங்கப்பட வேண்டும். அவர்களின் அடிப்படை உரிமைகள் தொடர்ந்து மீறப்படுவதற்கு முடிவு கட்டாத வரை இலங்கைத் தமிழர்களின் மறு வாழ்வு என்பது வெறும் கண்துடைப்பாகவும், தொலைதூரக் கனவாகவும் இருக்குமென்பதால்; ஈழத் தமிழர்கள் சுயமரியாதையோடும், உரிமையோடும் வாழ வேண்டும் எனும் நோக்கில்;

இலங்கைத் தமிழரிடம் ஐக்கிய நாடுகள் மன்றத்தின் மூலம் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்றும்; அது தெற்காசிய மனித உரிமைகள் பிரச்சினையாக முன்னிலைப்படுத்த வேண்டுமென்றும் 12—8—2012 அன்று சென்னையில் நடைபெற்ற "டெசோ" மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு; அது ஐ.நா. மன்றம், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம், ஐ.நா. உறுப்பு நாடுகள், இந்திய அரசு என அனைவரது ஆழ்ந்த கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டுள்ளது. அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில், பொது வாக்கெடுப்பு சம்மந்தமான தீர்மானம் ஒன்றினை முன்னெடுத்துச் சென்று நிறைவேற்றுவதற்கான உறுதியான முயற்சிகளை இந்திய அரசு

மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளப் படுகிறது.

தீர்மானம் 8.

இலங்கை இனவாத அரசின் தலைமைப் பொறுப்பிலே உள்ள அதிபர் மகிந்த ராஜபக்ஷே, தமிழினப் படுகொலையில் ஈடுபட்டு, மனித உரிமைகளுக்கும் – மனித நேயத்திற்கும் எதிரான பல்வேறு வகைப் போர்க் குற்றங்களைப் புரிந்திருப்பதன் காரணமாக, சர்வ தேச அரங்கில், மானுடத்திற்கே எதிரான ஒரு கொடுங்கோலராகவும் – பெருங் குற்றவாளியாகவும் பார்க்கப்படுபவர். இந்தியத் திருநாடு நட்புறவுடன் நீட்டும் அன்புக் கரத்தையும், மரபு வழியிலான விருந்தோம்பல் உணர்வையும் இந்தியாவின் பலவீனம் என்றே கருதிடக் கூடியவர். அவர் சிங்களப் பேரின வாதத்தின் சின்னமாக உலவி வருபவர். அவர் இந்தியத் திருநாட்டுக்கு வருவதை மத்திய அரசு ஊக்குவிக்கக் கூடாது.

ஈழத் தமிழர்களை முடிவுறாத துன்ப துயரங்களுக்காளாக்கி, தமிழ்த் தேசிய இனத்தை இலங்கைத் தீவிலிருந்து துடைத்தெறியும் அராஜக முயற்சியைத் தொடர்ந்து செய்து வரும் ராஜபக்ஷே இந்தியா வருவதை இங்குள்ள தமிழர்கள் ஒருக்காலும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எனவே ராஜபக்ஷேயின் இந்திய வருகையைக் கண்டித்து வரும் 8–2–2013 அன்று காலை 10 மணி அளவில் சென்னையில் கறுப்புடை அணிந்து

**மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவதென இந்தக் கூட்டம் தீர்மானிக்கின்றது.**

**தீர்மானம் 9.**

**இலங்கையில் ஈழத் தமிழர்கள் படுகின்ற அவலங்களையும், துன்பங்களையும் விளக்குகின்ற வகையில், இந்தியத் தலைநகரான டெல்லியில் வரும் மார்ச் திங்களில் “டெசோ” இயக்கத்தின் சார்பில் அனைத்திந்திய அளவில் அரசியல் கட்சித் தலைவர்களையும் அழைத்து ஒரு கருத்தரங்கம் நடத்துவதென இந்தக் கூட்டம் முடிவு செய்கிறது.**

***